*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*07 03 2026 SATURDAY 7 15 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

*1. தாம் மேற்கொண்ட மேற்குவங்க பயணத்தின் போது, அம்மாநில முதலமைச்சர் நெறிமுறைகளை பின்பற்றவில்லை என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*2. விமானப் போக்குவரத்து கட்டமைப்பில் இணைக்கப்படும் பகுதிகள், விரைவான வளர்ச்சியை பெற்று வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*3. Raisina உச்சி மாநாடு, உலக அரங்கில் இந்தியாவிற்கு பெருமை தேடித்தந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.*

*4. வாக்களிக்க தகுதியுள்ளவர்கள் பட்டியலிலிருந்து விடுபடக்கூடாது என்ற நோக்கிலேயே, சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.*

*5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று இந்தியா இரண்டாவது இன்னிங்ஸின் ஆட்ட நேர இறுதியில் 6 விக்கெட் இழப்பிற்கு 105 ரன் எடுத்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*தாம் மேற்கொண்ட மேற்குவங்க பயணத்தின் போது, அம்மாநில முதலமைச்சர் நெறிமுறைகளை பின்பற்றவில்லை என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கண்டனம் தெரிவித்துள்ளார்*

*தமது கருத்துக்களை பொதுமக்களிடையே பகிர்ந்து கொண்ட குடியரசுத் தலைவர், ஒரு மாநிலத்திற்கு குடியரசுத்தலைவர் வருகை தரும்போது விதிமுறைகளின்படி, மாநில முதலமைச்சர் கட்டாயம் சந்திக்க வேண்டும் என்று தெரிவித்தார்.*

*சிலிகுரியில் Santal பழங்குடியினரின் 9-வது சர்வதேச கருத்தரங்கில் தாம் பங்கேற்க சென்றிருந்த போது, மாநில முதலமைச்சரோ, அதிகாரிகளோ வரவில்லை என்று கூறினார்.*

*இந்த கருத்தரங்கில் பங்கேற்க வந்த பழங்குடியின மக்கள் பலர் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.*

*கருத்தரங்கு நடைபெறுவதற்கான போதிய இடவசதி செய்து தரப்படவில்லை என்றும் திருமதி. திரௌபதி முர்மு குறிப்பிட்டார்.*

*>>>>>><<<<<<*

*விமானப் போக்குவரத்து கட்டமைப்பில் இணைக்கப்படும் பகுதிகள், விரைவான வளர்ச்சியை பெற்று வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*ராஜஸ்தான் மாநிலம், கோட்டாவில் புதிய விமான நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில், பிரதமர் பகிர்ந்து கொண்டுள்ள காணொலிப் பதிவில், கடந்த 2014ஆம் ஆண்டு நாட்டில் 70 விமான நிலையங்கள் மட்டுமே இருந்ததாகவும், தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பொறுப்பேற்ற பின்னர், இந்த எண்ணிக்கை 160ஆக உயர்ந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.*

விமான நிலையத்தை சுற்றியுள்ள நகரங்களில் சுற்றுலா வளர்ச்சி கண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விமான போக்குவரத்து வசதி, பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதாகவும், வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தருவதாகவும் பிரதமர் அந்த பதிவில் கூறியுள்ளார்.

கோட்டா விமான நிலையத்திற்கு அடிக்கல் நாட்டி பேசிய, மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, இந்த விமான நிலையத்தால், கோட்டா தொழில் நகரமாக உருவெடுக்கும் என்றும், குறுகிய காலத்தில் பல தொழிற்சாலைகள் இங்கு உருவாகும் என்றும் தெரிவித்தார்.

விழாவில் பேசிய சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு, இரண்டாண்டுகளில் இந்த விமான நிலையப் பணிகள் முடிக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு வரும் என்று கூறினார்.

>>>>>><<<<<<

இந்தியா அண்மையில் மேற்கொண்ட வர்த்தக ஒப்பந்தங்களின் போது, நாட்டு நலன் விட்டுத் தரப்படவில்லை என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் *Raisina* உச்சி மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் பேசிய அவர், சர்வதேச அளவில் வர்த்தகத்திற்கான வாய்ப்புகள் திறந்துவிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

கடந்த பத்தாண்டுகளில் இந்தியா நம்பிக்கையுடன் சிறப்பான வர்த்தகத்தை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

உலகளாவிய வர்த்தக ஒத்துழைப்புக்கான சூழல், தற்போது உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*Raisina* உச்சி மாநாடு, உலக அரங்கில் இந்தியாவிற்கு பெருமை தேடித்தந்துள்ளதாகவும் திரு. பியூஷ் கோயல் கூறினார்.

>>>>>><<<<<<

பிரதமரின் மக்கள் மருந்தக திட்டம், ஏழை எளிய மக்களின் மருந்து செலவை கணிசமாக குறைத்துள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

*Jan Aushadhi* தினத்தை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பிரதமரின் மக்கள் மருந்தக திட்டப் பயனாளிகள் அனைவருக்கும் தமது வாழ்த்துகளை தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

ஜெனரிக் மருந்துகள் குறித்த விழிப்புணர்வு இந்த மருந்தகங்கள் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாடுமுழுவதும் செயல்பட்டு வரும் 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மருந்தகங்கள் மிக குறைந்த விலையில், மக்களுக்குத் தேவையான மருந்துகள் அனைத்தையும் வழங்கி வருவதாக அவர் கூறினார்.

இந்த திட்டத்தின் பயனாக, 40 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் மக்கள் சேமித்திருப்பதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

*அனைவரின் முயற்சியில் அனைவருக்குமான வளர்ச்சி என்ற தலைப்பிலான பட்ஜெட்டுக்கு பிந்தைய இணையவழிக் கருத்தரங்கில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் 9ஆம் தேதி பங்கேற்கவுள்ளார்.*

*கல்வி, திறன் மேம்பாடு, உயர்கல்வி ஆகியவற்றில் மக்களின் மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதற்கு, வரும் ஆண்டிற்கான பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட முக்கிய திட்டங்கள் மற்றும் ஒதுக்கீடு குறித்து இதில் பிரதமர் பகிர்ந்து கொள்கிறார்.*

*படைப்பாற்றல் பொருளாதாரத்திற்கான கட்டமைப்பை உருவாக்குவது உள்ளிட்ட புதிய துறைகளின் வளர்ச்சிக்கான வழிகள் குறித்தும் அவர் விவாதிக்கவுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*வாக்களிக்க தகுதியுள்ள எவரும் வாக்காளர் பட்டியலிலிருந்து விடுபடக்கூடாது என்ற நோக்கிலேயே, வாக்களர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar தெரிவித்துள்ளார்.*

*கேரள மாநில சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி, கொச்சியில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், குறைபாடுகள் இல்லாத வாக்காளர் பட்டியல், ஜனநாயகத்தின் அடித்தளமாக விளங்குகிறது என்று கூறினார்.*

*ஜனநாயக மாண்புகளை கடைபிடிப்பதில் கேரள மாநிலம் பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்கிறது என்றும், பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகவும் உள்ளது என்று திரு. Gyanesh Kumar குறிப்பிட்டார்.*

*கேரளாவில் 30 ஆயிரத்து 471 வாக்குச்சாவடிகள் உள்ளதாக தெரிவித்த அவர், இவற்றில் 5 ஆயிரம் வாக்குச்சாவடிகள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.*

*வரும் சட்டப்பேரவை தேர்தலில் 100 சதவீதம் இணையவழி கண்காணிப்பு உறுதி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.*

*397 வாக்குச்சாவடிகள், மகளிர் வாக்குச்சாவடிகளாக செயல்படும் என்றும், இவற்றில் வாக்குச்சாவடி அலுவலர் உட்பட அனைத்துப் பணிகளிலும் பெண்கள் மட்டுமே பணிபுரிவர் என்றும் அவர் தெரிவித்தார்.*

*மேலும் 290 மாதிரி வாக்குச்சாவடிகள் கேரள மாநிலத்தில் அமைக்கப்படவுள்ளதாகவும் தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar கூறினார்.*

*>>>>>><<<<<<*

*பிரதமரின் சூரிய மின்சக்தி திட்டம் நாடுமுழுவதும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*இத்திட்டத்தின் மூலம் தங்களது வீடுகளில் சூரிய மின்சக்தி மேற்கூரை அமைக்கப்பட்டுள்ளதால், மின்கட்டணச் செலவு சேமிக்கப்பட்டுள்ளதாக திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகள் தெரிவித்தனர்.*

*(சவுண்ட் பைட் பயனாளி 40 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

மேற்காசியாவில் 8வது நாளாக தொடர்ந்து போர் நீடித்து வருகிறது.

அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் ஆகிய நாடுகள் வான்வழி மற்றும் ட்ரோன் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளன.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து, ஈரான் மீது தொடர்ந்து தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன.

இதனிடையே, 151 மில்லியன் டாலர் அளவிற்கு ஆயுதங்களை இஸ்ரேலுக்கு வழங்குவதற்கு அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் ஒப்புதல் அளித்துள்ளார்.

இன்று அதிகாலை முதல் ஈரான் தலைநகர் டெஹ்ரான் மீது, தொடர் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில், ஈரானில் குழந்தைகள், பெண்கள் உட்பட ஆயிரத்து 332 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஈரானுக்கான ஐ.நா. தூதர் திரு. *Amir Syed Iravani* தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய படைகள், பொதுமக்கள்மீது தாக்குதல் நடத்தி வரும் நிலையில், ஈரான் தற்காப்பு தாக்குதல் நடவடிக்கையையே மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

ஜோர்டானில் செயல்பட்டு வந்த அமெரிக்காவின் ரேடார் கண்காணிப்பு அமைப்பை, ஈரான் ஏவுகணைகளை கொண்டு அழித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், நிபந்தனை ஏதுமின்றி சரணடைய வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்க முடியாது என்று ஈரான் அதிபர் திரு. *Masoud Pezeshkian* உறுதிபட தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று இந்தியா இரண்டாவது இன்னிங்ஸின் ஆட்ட நேர இறுதியில் 6 விக்கெட் இழப்பிற்கு 105 ரன் எடுத்துள்ளது.

பெர்த்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில், இந்தியா முதல் இன்னிங்ஸில் 198 ரன் எடுத்தது.

ஆஸ்திரேலியாவின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 323 ரன்.

>>>>>><<<<<<

சர்வதேச மகளிர் தின கொண்டாட்டங்களை ஒட்டி, மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை மூலம், நாட்டின் 250 இடங்களில் மகளிருக்கான விளையாட்டு போட்டிகள் நாளை நடைபெறவுள்ளதாக மத்திய விளையாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி. *Raksha Nikhil* தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விளையாட்டுப் போட்டிகள் நாடுமுழுவதிலும் உள்ள மகளிரை இணைப்பதற்கான வாய்ப்பாக அமையும் என்று கூறினார்.

தமிழகத்தில் செங்கல்பட்டு, கடலூர், திண்டுக்கல், ஈரோடு, மதுரை, பெரம்பலூர், புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருவள்ளூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் இந்த விளையாட்டு போட்டிகள் நடைபெறவுள்ளன.